**முசலி பிரதேச சபை**

----------------------------

**மன்னார் மாவட்டம்**

---------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

--------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜனவரி 24 இல் சபையின் செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து முசலி பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

--------------------------------------

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 ஜனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டியவை

------------------------

05 அலுவலர்களிடமிருந்து பெறவேண்டிய அலுவலர் ஊழியர் முற்பணக் கணக்கு கூட்டுமொத்தத் தொகையான ரூபா 83,521 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ)1988 இன் பிரதேச சபை நிதி நிர்வாக விதிகள் | |
| i) விதி இலக்கம் 5(xii) | காசு, களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாக வள்ள அலுவலரிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| ii) விதி இலக்கம் 59 | ஒவ்வோராண்டு தொடக்கத்திலும் வருமான பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர் அல்லது தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு உத்தியோகத்தரினால் சபைப் பிரதேசத்தில் வருமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| iii) விதி இலக்கம் 178(3) | வழங்குனர்களின் நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| iv) விதி இலக்கம் 218 | காணிகள், கட்டடங்கள் யாவும் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு முறையேனும் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு உத்தியோகத்தரினால் சோதனை செய்யப்படவேண்டியிருந்தும் அறிக்கையிடும் திகதி வரை சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 150(1) | வியாபாரங்கள் பற்றிய நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டு வியாபார உரிமக் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதி | |
| (i) நிதி ஒழுங்குவிதி 104 | பௌதிக காசு குறைவு ரூபா 12,920 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதி ஒழுங்குவிதி 371 | 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்ட முற்பணங்கள் ரூபா 419,703 ஆன தொகை அறிக்கையிடும் திகதி வரைக்கும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதி ஒழுங்குவிதி 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 1,350,236 ஆன தொகைக்கு பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பொதுநிர்வாகஉள்நாட்டலுவல்கள் அமைச்சின்10 ஒக்டோபர் 1990 திகதியிட்ட 41/90 இலக்க சுற்றுநிருபம். | சபையினால் பயன்படுத்தப்பட்டுவரும் 51 எண்ணிக்கையான வாகனங்களுக்கு 6 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் நுகர்வு மீதான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) 28.11.2002 திகதியிடப்பட்ட IAI/2002/02 இலக்க திறைசேரி சுற்றுநிருபம். — கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்களிற்கு பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

------------------

**2.1 நிதி விளைவுகள்**

-----------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 5,035,482 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது இதற்கு நேரெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்திலும் கூடிய செலவினமாக ரூபா 771 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 5,036,253 முன்னேற்றத்தைக் காட்டுகின்றமைக்கான காரணம் சபையினுடைய மீண்டுவரும் உதவுதொகை மற்றும் வருமானங்கள் உயர்வடைந்தமையே ஆகும்.

**2.2 வருமான முகாமைத்துவம்**

--------------------------------

**2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்**

-----------------------------------------

சபையின் மீளாய்வாண்டு மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும், உள்ளபடியான வருமானத்திற்கும் இடையில் ரூபா 6,038,472 வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

**2.2.2 வாடகைகள்**

---------------

2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான இறைச்சிக் கடை வாடகை நிலுவை ரூபா 231,344 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 ஏனைய வருமானங்கள்**

---------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் 10 தொலைத் தொடர்பு கோபுர நிறுவனங்கள் காணப்படுகின்ற போதிலும் அவற்றில் 04 தொலைத் தொடர்பு கோபுரங்களிற்கு அனுமதிக்கப்பட்ட வாடகை சபையினால் இதுவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 முத்திரைக் கட்டணம்**

-------------------------

பதிவாளர் நாயகத்திடமிருந்து 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை பெறப்பட வேண்டிய ரூபா 4,430,455 தொகையான முத்திரைத் தீர்வை நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

-----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

**(அ)** 04 உழவு இயந்திரப் பெட்டிகள் 03 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாக பயன்படுத்தப்படாமல் வைத்திருக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றைத் திருத்தம்

செய்து பயன்படுத்துவதற்கு அல்லது உரிய முறையில் ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** புறநெகும செயற்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 15.1 மில்லியன் பெறுமதியான 02 வர்த்தக தொகுதி கட்டிடங்கள் முழுமையாக இதுவரைக்கும் உபயோகிக்கப்படாமல் மூடப்பட்டுள்ளது.

**3.2 வாகனப் பாவனை**

----------------------

மீளாய்வாண்டில் பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் மோட்டர் கிரேடர்களுக்கு 12 சந்தர்ப்பங்களில் 16,300 லீற்றருக்கான ரூபா. 154,850 தொகைக்கான எரிபொருள் பாவனை தொடர்பாக நாளாந்த வாகன ஓட்ட அட்டவணை பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு அறிக்கை**

------------------------------

மத்திய அரசு பொது நிதி பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆம் திகதிய PF/R/2/2/3/5/(4) ஆம் இலக்க கடிதத்தின் 1:4:1 ஆம் பந்தியின் படி வருடாந்த செயற்பாட்டு அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை சபையினால் மீளாய்வு ஆண்டிற்கான செயற்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. நல்லாட்சியும் கணக்களிப்பொறுப்பும்**

------------------------------------------------

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

-------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

**(அ)** மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 16 தலைப்புகளிற்கான ஒதுக்கீடுகளில் 40 வீதம் தொடக்கம் 100 வீதம் வரையான கூட்டுமொத்தத் தொகையான ரூபா 1,274,301 பெறுமதியான ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட 05 தலைப்புக்களிற்கான கூட்டுமொத்தத் தொகையான ரூபா 364,600 செலவினங்களின் ஒதுக்கீடுகள் முற்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

-----------------------------

மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வு வினைத்திறமையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட அவதானம் கோரப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) பெறவேண்டிய கணக்குகள்
(ஈ) நிலையான வைப்புக்கள்
(உ) கணக்கீடு